/தனிகவனம்/மிகமிகஅவசரம்/

வேலூர்மாவட்டமுதன்மைக்கல்விஅலுவலரின்செயல்முறைகள்

ந.க.எண்.3898/ஆ2/2024 நாள்: 10.11.2025

பொருள்: பள்ளிக்கல்வி– கல்வி உதவித்தொகை–பெண் கல்வி ஊக்கத்தொகை–பிரீ மெட்ரிக் மற்றும் போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை பெறவிருக்கும் மாணவ/மாணவியர்களுக்கு ஆதார் சீடிங் செய்யப்பட்ட இந்திய போஸ்ட்பேமெண்ட் வங்கி கணக்கு எண் துவக்குதல் மற்றும் ஆதார் பயோ–மெட்ரிக் புதுபிக்கும் பொருட்டு 21.11.2025 அன்று முகாம் நடைபெறுதல் – முன் ஏற்பாடுகள் செய்ய தெரிவித்தல் –சார்பு.

பார்வை: பள்ளிக் கல்வி இணைஇயக்குநரின் (நாட்டு நலப்பணிகள்) இணைய வழி கூட்டம் நாள்: 07.11.2025.

-------

வேலூர் மாவட்டம், அரசு/அரசு உதவி பெறும்/தனியார் தொடக்க/ நடுநிலை/உயர்/மேல்நிலைப் பள்ளிகளில் கல்வி பயிலும் மாணவ/மாணவியர்களுக்கு வழங்கப்பட்டு வரும் கல்வி உதவித்தொகை மற்றும் பெண் கல்வி ஊக்கத்தொகை பெற இந்தியன் போஸ்டல் வங்கி கணக்கு(Aadhar seeded account) துவங்க பார்வையில் காணும் பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் இணைய வழி கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, இந்திய அஞ்சல் துறை மூலம் ஆதார் பயோமெட்ரிக் புதுப்பித்தல் மற்றும் இந்தியன் போஸ்டல் வங்கி கணக்கு(Aadhar seeded account) துவக்க, பள்ளிகளில் 21.11.2025 அன்று முகாம் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. சார்ந்த பள்ளி தலைமையாசிரியர்கள்/முதல்வர்கள், இணைப்பில் உள்ள Excel படிவத்தில் காணும் தங்கள் பள்ளி மாணவர்களுக்கு ஆதார் பயோமெட்ரிக் புதுப்பித்தல் மற்றும் eKyc–Verification பணிகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

1. **ஆவணத் தயார்நிலை:**முகாம் நடைபெறும் நாளில், வங்கி கணக்கு துவங்கிட மாணாக்கர்களின் ஆதார்அட்டை மற்றும் ஆதார்அட்டையுடன் இணைக்கப்பட்ட அலைபேசி எண் கொண்ட கைபேசி போன்றவைதயார் நிலையில் வைத்துக் கொள்ள வேண்டும். மாணவர்கள் தேவையான ஆவணங்களைக் கொண்டு வருவதை உறுதி செய்யவும். ஆதார் அட்டை மற்றும் மொபைலில் அவர்களின் ஆதார் அட்டை OTP பெறப்படும்.
2. **வங்கிக்கணக்கு துவங்கப்படவேண்டிய மாணவர்கள்:** அஞ்சலக அதிகாரிகளின் பட்டியலின்படி அனைத்து மாணவர்களும் வேறு ஏதேனும் வங்கிக் கணக்கு வைத்திருந்தாலும், இந்தியன் போஸ்ட் பேமெண்ட் வங்கி (IPPB) கணக்கைத் திறக்க வேண்டும்.NPCI Inactive–பட்டியலில் அஞ்சல் (IPPB)
3. **களஒருங்கிணைப்பு:** தேவைப்படும் இடங்களில் இந்தியா போஸ்ட்குழு, மாணவர்கள் மற்றும் பெற்றோருக்கு இடையேயான தொடர்புகளை சார்ந்த பள்ளி தலைமையாசிரியர்கள்/முதல்வர்கள் உறுதி செய்தல்வேண்டும்.

4. **eKyc Verification:**மாணவர்களுக்கான eKyc Verification பணியானது பள்ளி அளவிலேயே நிறைவு செய்ய வேணடியது. மேலும் தங்கள் பள்ளி மாணவர்களுக்கு eKyc Verification மேற்கொள்ள TN Generic செயலி மூலம் மேற்கொள்ளப்படவேண்டும்

குறிப்பு: ஏற்கனவே, IPPB– வங்கிக் கணக்கு இருந்தும், NPCI Inactive நிலையில் இருக்கும்மாணவர்களுக்கு அருகில் இருக்கும் அஞ்சலக அலுவலக கிளையை அணுகி காரணத்தை சரி செய்ய வேண்டும்.

மேற்கூறிய அனைத்து வழிமுறைகளையும் பின்பற்றி இந்தியன் போஸ்ட் பேமெண்ட் வங்கி (IPPB) கணக்குகள் துவங்கப்பட்ட விவரங்களை மாணவர்களின் EMIS தளத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும். இப்பணியை முக்கிய பணியாக கருத்தில் கொண்டு விரைந்து செயல்பட்டு தங்கள் பள்ளி மாணவ/மாணவியர்களுக்கு உரிய நேரத்தில் கல்வி உதவித்தொகை மற்றும் பெண்கல்வி ஊக்கத்தொகை பெற வழிவகை செய்யுமாறு அனைத்துவகை பள்ளிதலைமையாசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மேலும், இப்பொருள்சார்ந்து, சார்ந்த பள்ளி தலைமையாசிரியர்கள் உரிய நடவடிக்கை மேற்கொள்வதை உறுதி செய்யுமாறு மாவட்டக்கல்வி அலுவலர்கள்(இடைநிலை/ தொடக்கக்கல்வி/தனியார்பள்ளிகள்) கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

முதன்மைக் கல்வி அலுவலர்
வேலூர்.

**பெறுநர்**

சார்ந்தபள்ளிதலைமையாசிரியர்கள்
வேலூர்மாவட்டம்.

**நகல்**

மாவட்டக்கல்விஅலுவலர்
(இடைநிலை/தொடக்கக்கல்வி/தனியார்பள்ளிகள்)
மாவட்டக்கல்விஅலுவலகம்.
வேலூர்.
(தொடர்நடவடிக்கையின்பொருட்டுஅனுப்பலாகிறது).